Registered as a NewsPaper  பக்கங்கள் 06  விலை ரூபா: 5 00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03  திருவள்ளுவர் ஆண்டு 2023  மாசி 19  (02-03-1992)  திங்கட்கிழமை  ஓசை: 3

## கொழும்பில் இப்படியும் பேசிக் கொள்கிறார்கள்

கொழும்பில் இப்படியும் பேசிக்கொள்கிறார்கள். ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பிரதம மந்திரி பதவிக்கு ஒருவரைத் தெரிவு செய்வதற்காக நேர்முகப் பரீட்சை ஒன்றை வைத்தார். முதலில் காமினி திசநாயக்கா அழைக்கப்பட்டார். காமினியிடம், ''ஒன்றும் ஒன்றும் எத்தனை?'' என்ற கேள்வியைப் பிரேமதாசா கேட்டார். ''இரண்டு'' என்று காமினி பதிலளித்தார். அடுத்து அத்துலத் முதலியின் முறைவந்தது. காமினியிடம் கேட்கப்பட்ட அதே கேள்வி (6 ஆம் பக்கம் பார்க்க)

# கிராமங்கள்மீது அகோர குண்டுவீச்சு

# மூவாயிரம் மக்கள் இடம்பெயர்வு

## வன்னியில் புலிகள் - இராணுவம் மோதல்

வவுனியா மாவட்ட தமிழ்க்கிராமங்கள் மீது பாரிய குண்டு வீச்சு தாக்குதலையும், எறிகணை வீச்சையும் சிறிலங்கா விமானப்படை விமானங்களும், . இராணுவத்தினரும் மேற் கொண்டு வருகின்றனர். இதன் காரணமாக 3000 த்திற்கு மேற்பட்ட மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதேவேளை வன்னி விக்கிரம III இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றும் கடும் மோதல் இடம் பெற்றது. கருவேப்பங்குளம் என்னும் இடத்தில் இம்மோதல் நிகழ்ந்தது.

நேற்று தரணிக்குளத்தில் இருந்து ஈச்சன்குளப் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்காப் படையினர் மீது கருவேப்பங்குளம் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்களை மேற் கொண்டனர் இந்த மோதல் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமா அரசு ஜே.வி.பி மூலம் இலாபம் தேட முயல்கின்றது

### சிங்களப்பத்திரிகைகள் கண்டனம்

(கொழும்பு)

வரும் பொதுத் தேர்தலில் ஜனதா விமுக்திப் பெரமுனையைப் பங்கு பற்ற வைத்து அரசியல் இலாபத்தைப் பெற பிரேமதாசா அரசு முயற்சிப்பதாக லங்கா தீப, லக்தீப இதழ்கள் நேற்றுத் தலைப்புச் செய்திகள் வெளியிட்டுள்ளன.

லண்டனில் வாழும் ஜே.வி.பியின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்க எழுதிய கடிதமொன்றில், றோகண விஜேயவீராவின் மைத்துனர் சுபாஸ் சந்திர பர்னான்டோவை சிறிலங்காவில் ஜே.வி.பியின் பிரதிநிதியாக அங்கீகரித்துள்ளார். இக்கடிதம் பாரிசில் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும், இப்போது டாக்டர் சந்திரா என்பவர் சோமவன்ச அமரசிங்காவைச் சந்திக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவு. அரச அதிபர் மாற்றம் 'பனிப்போர்' காரணம்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் அரசாங்க அதிபருக்கும் இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கும், நீண்ட நாட்களாக இருந்து வந்த 'கெடுபிடி' அரச அதிபரின் இடமாற்றத்துடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது

இந்த இருவருக்கும் இடையேயான பனிப்போரின் காரணமாக அரச அதிபர் திரு. மார்க்கண்டு பதவியிலிருந்து இடமாற்றப்பட்டுதிரு. தில்லை நடராஜன் என்பவர், வவுனியாவின் புதிய அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்

இந்த மாற்றங்களுக்கு அரச அதிபருடன் பனிப்போரில் ஈடுபட்டிருந்த தமிழ்ப் பெண் ராஜாங்க அமைச்சர் கணிசமான பங்காற்றியிருக்கிறார் எனத் தெரியவருகிறது. (க)

## ''அரசியல் தீர்க்கதரிசனத்தை தலைகீழாக மாற்றிவிடும் அபார சக்தி படைத்த புலிகள்''

''அரசியல் தீர்க்கதரிசனத்தை தலைகீழாக மாற்றிவிடும் அபார சக்தி படைத்தவர்கள் விடுதலைப்புலிகள். தமிழ்நாட்டில் பின்தளங்களை இழந்து விட்டதால் புலிகள் பலவீனமடைந்து செயலிழந்து விட்டார்கள் எனப் பல அரசியல் விமர்சகர்கள் கருதினார்கள். ஆனால் புலிகளோ இலங்கையின் எல்லா முனைகளிலும் திடீர் அதிரடித் தாக்குதல்களை நடத்திவருகிறார்கள்''

இவ்வாறு பிரபல இந்திய வாரப் பத்திரிகையான 'புரண்ட் லைன்' கருத்து தெரிவித்திருக்கிறது. ''திரு. தொண்டமான் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்ற எதிர்பார்ப்பில்தான் புலிகள் தமது இராணுவ நடவடிக்கைகளை கடந்த டிசம்பரில் தளர்த்தியிருந்தார்கள்'' என்று குறிப்பிடும் இப்பத்திரிகை, புலிகளின் தாக்குதல்கள் தீவிரப் படுத்தப்பட்டதன் நோக்கங்களில் ஒன்று தமிழ் நாட்டிலிருந்து திரும்பும் அகதிகளை பதற்றத்திற்கு ஆளாக்குவது தான் எனக் கூறுகிறது சிறிலங்கா ஆயுதப்படைகள் யாழ்ப்பாணம்மீது படையெடுத்தால் சிங்கள தேசத்தில் திருப்பித் தாக்கும் பலம் புலிகளுக்கு உண்டு என்றும் இப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

# ஆனையிறவில் திடீர்த் தாக்குதல்; இரண்டு காவரலண்கள் அழிப்பு

## இரு படை பலி: ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு சிறிய உப்பளம் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை 12.45 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற் கொண்ட அதிரடித் தாக்குதலில் இரண்டு காவலரண்கள் கைப்பற்றப்பட்டன. இரண்டு இராணுவத்தினர் பலியாகினர். இராணுவத்தினரின் சடலங்களும் பல இராணுவ உபகரணங்களும் புலிகளால் கைப் பற்றப்பட்டன

விடுதலைப் புலிகளினால் நேற்று நடாத்தப்பட்ட இந்த அதிவேகத் தாக்குதல் 5 நிமிடங்கள் மட்டுமே இடம் பெற்றது காவலரண்களில் இருந்த இரண்டு இராணுவத்தினர் பலியாகினர். ஏனையோர் காயங்களுடன் பிரதான முகாமிற்குள் ஓடிவிட்டனர். இந்த தாக்குதலினால் கைப் பற்றப்பட்ட இரண்டு காவலரண்களும் விடுதலைப் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டன

போராளிகள் தரப்பில் இழப்பெதுவும் இல்லை.

இந்த வெற்றிகரமான தாக்குதலில் கைப்பற்றப்பட்ட இராணுவ உபகரணங்களின் விபரம்:

★ ரி - 56-2 ரக துப்பாக்கி-02
★ அதற்குரிய மகசின் -09
★ ரி - 81 மகசின் -05

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் கிராமங்களில் 4 நாட்களில் 16 பேர் கைது

(திருக்கோணமலை)

மூதூரிலுள்ள சம்பூர், கிளிவெட்டி, சீதனவெளி ஆகிய கிராமங்களில் கடந்த 4 நாட்களில் மட்டும் 16 அப்பாவித் தமிழ்மக்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று வாரகாலமாக தொடர்ந்து இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டிருந்த இந்த கிராமங்கள் தற்போது சுற்றிவளைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. எனினும் இராணுவத்தின் அடாவடித்தனங்களும் கைதுகளும் சித்திரவதைகளும் தொடர்வதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அமைச்சர் ரஞ்சன் கொலை; இருவர்மீது வழக்குப் பதிவு

(கொழும்பு)

அருணாசலம் சுரேந்திரன் அல்லது சகீர் என்பவர்மீதும், சாவகச்சேரியைச் சேர்ந்த தயாபரன் அல்லது ஜெகநாதன் அல்லது றொபின் என்பவர் மீதும், அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்ணாவைக் கொலை செய்ததாகவும், கூட்டுப்படைத் தலைமையகக் குண்டுவெடிப்பு சம்பந்தமாகவும் குற்றஞ்சாட்டி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் விடுத

(6 ஆம் பக்கம் பார்க்க)

வெளிவருகிறது

ஓவியர் தயாவின் கருத்தோவியங்கள்

காலமும் கோலமும்

- இது ஒரு ஈழநாதம் வெளியீடு

## ஐ. தே. கட்சி அரசாங்கம்மீது நம்பிக்கையில்லா பிரேரணை

### சபாநாயகரிடம் எதிர்க்கட்சிகள் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின்மீது இரண்டு நம்பிக்கையில்லா தீர்மானங்களை எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ளன. இந்த தீர்மானங்களை எதிர்க்கட்சிகள் பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். முகமத்திடம் கையளித்துள்ளன.

அரச வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பன முறிந்து விட்டதாகக் கூறி அவற்றை மறுசீரமைக்க வேண்டுமென பிரதமர் டி. பி. விஜயதுங்க கூறியிருப்பதை எதிர்க்கும் ஒரு தீர்மானமும்,

70 கோடி ரூபா செலவில் 6 ஏயார்பஸ் விமானங்களை வாங்க அரசு உத்தேசித்திருப்பதை எதிர்க்கும் ஒரு தீர்மானமும்,

எதிர்க்கட்சிகளால் சபாநாய

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். இந்துக் கல்லூரி 7விக்கட்டுக்களால் வெற்றி

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாண பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி சென்பற்றிக்ஸ் கல்லூரியை 7 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.

இப்போட்டி சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் வெள்ளிக்கிழமை 28ஆம் திகதியும், சனிக்கிழமை29ஆம் திகதியும் நடைபெற்றது.

முதலில்துடுப்பெடுத்தாடிய சென்பற்றிக்ஸ் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து மொத்தம் 72 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

செல்வன் எரிக் நிமலன் 26 ஓட்டங்களை பெற்றுள்ளார். யாழ். இந்துக்கல்லூரிசார்பில் பந்து வீசிய செல்வன் சசிசேகரன் 3 விக்கட்டுகளையும், செல்வன் நரேந்திரன் 4 விக்கட்டுகளையும், செல்வன் விஜயகுலன் 3விக்கட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

யாழ். இந்துக் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 123 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் செல்வன் ரஜீவன் 26ஓட்டங்களையும், செல்வன் ராகவன் 24 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய செல்வன் சதீஸ், செல்வன் பாலகுமார் முறையே 3, 2, விக்கெட்டுக்களைகைப்பற்றினார்கள்.

சென்பற்றிக்ஸ் தனதுஇரண்டாவது இன்னிங்சில் மொத்தம் 115 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் செல்வன் சதீஸ், செல்வன் பாலகுமார் முறையே 23, 24 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

யாழ். இந்துக்கல்லூரி சார்பில் செல்வன் சசிசேகரன் மிகவும் திறம்பட பந்து வீசி 5 விக்கெட்டுகளை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

யாழ். இந்துக் கல்லூரி 3 விக்கட் நஷ்டத்திற்கு 65 ஓட்டங்களைபெற்று வெற்றியை தமதாக்கிக் கொண்டது.

இதில் செல்வன் வரதன் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் திருக்குமரன் 23 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

சென் பற்றிக்ஸ் சார்பில் பந்து வீசிய செல்வன் பாலகுமார் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

திரு. ஆர் சிறீதரனும், திரு. எம். சுந்தரம்பிள்ளையும் மிகவும் சிறப்பாக மத்தியஸ்தம் வகித்தனர்.

(42)

## வரி விளம்பரம்

### இசை வகுப்புகள்

நீங்களும் இசை வல்லுனர் ஆகவேண்டுமா? சப்தஸ்வரம் இசைக் கல்லூரியில் தொடர்பு கொள்ளவும். இங்கே ஒகன்- கிற்றார் - ட்றம்ஸ், மிருதங்கம் வயலின் - ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்பு சப்தஸ்வரம், இசைக்கல்லூரி அரியாலை-பார்வதி வித்தியா சாலை முன்பாக அரியாலை- யாழ்ப்பாணம்.

(சி 3978)

## யாழ். மாவட்டத்தில் கைதான

# 126 பேர் விபரங்கள் விரைவில் வெளிவரலாம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளின் போது யாழ். மாவட்டத்தில் வைத்து கைது செய்யப்பட்ட சுமார் 126 அப்பாவித் தமிழ் மக்களது விபரங்கள் விரைவில் வெளியீடப்பட உள்ளன. இதற்கான நடவடிக்கைகளை கொழும்பில் தங்கியிருந்த சமயம் யாழ் அரச அதிபர் மேற்கொண்டிருந்தார்.

இவர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதும் அவர்களது பெயர் விபரங்களும் விரைவில் வெளியிடப்பட இருக்கிறது. கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகம் இவ் விபரங்களை வெளியிடுவதற்கு இணங்கியிருக்கிறது'

(க)

# சேவை நலம் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''அரச ஊழியர்கள் தங்கள் கடமையை உணர்ந்து மக்களுக்கு சேவை செய்வார்களானால் மக்கள் மத்தியில் செல்வாக்கும் நன்மதிப்பும் ஏற்படும் இதற்கு உதாரணமாக விளங்கியவர் திரு சின்னத் தம்பி.''

இவ்வாறு யாழ். நவீன சந்தை மேற்பார்வையாளர் திரு சின்னத்தம்பி சேவையிலிருந்து ஓய்வு பெற்று செல்வதையிட்டு யாழ். வர்த்தகர் சங்கம் நடாத்திய பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்க நிர்வாக செயலாளரும், ஊழியன் பத்திரிகை ஆசிரியருமான திரு. என். இராமச்சந்திரன் குறிப்பிட்டார்.

யாழ். வர்த்தக சங்க உபதலைவர் திரு.சங்கரப்பிள்ளை தலைமையில் யாழ். நவீன சந்தை மேல்மாடி கட்டடத்தில் நேற்று காலை நடைபெற்ற வைபவத்தில் திரு சின்னத்தம்பியின் சேவையை கௌரவிக்கு முகமாக யாழ். வர்த்தகர்கள் சார்பில் பணமுடிச்சு ஒன்று அன்பளிப்பாக அவருக்கு வழங்கப்பட்டது.

## கூட்டுறவாளரின்

# மகளிர்தின நிகழ்ச்சிகள் இந்து மகளிர் கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஏனைய கூட்டுறவு அமைப்புகளுடன் இணைந்தே மகளிர் தினக் கொண்டாட்டங்களை நடத்தவுள்ளது எனவும், இக் கொண்டாட்டங்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் மகளிர் விவகாரக் குழுவின் தலைவி செல்வி அ. திருஞானஜோதி தலைமையில் நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் எமது பத்திரிகையில் குறிப்பிட்டது போல் யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசம் தனித்து யாழ். இந்துக் கல்லூரியில் எதிர் வரும் மார்ச் எட்டாம் திகதி மகளிர் தின விழா எதையும் ஏற்பாடு செய்யவில்லை என சமாசத்தின் மாவட்ட செயலாளர் ஏ எம். ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

# பதுளைத் தோட்டத்தில் பாதுகாப்பு படைப்பிரிவு

((பதுளை)

பதுளை எலதலுவ தோட்டப் பங்களா ஒன்றில் சிறிலங்கா பாதுகாப்புப்படைப் பிரிவொன்று நிறுத்தப்பட்டுள்ளது.

'தகவல் சேகரிக்கும் பிரிவு' என்ற வாசகங்கள் அடங்கிய பெயர்ப்பலகை ஒன்று பங்களாவின் முன்னால் தொங்க விடப்பட்டுள்ளது என்றும், இந்த பங்களா பெரிய மலை உச்சியில் இருப்பதால் பதுளை நகரைக் கண்காணிக்கக் கூடியதாக இருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பங்களாவைச் சுற்றி பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ளது. முட்கம்பிகள் அடங்கிய வேலியும் பங்களாவைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பங்களாவில் முன்பு எலதலுவ தோட்ட நிர்வாகியும் பின்பு மக்கள் பெருந் தோட்ட அபிவிருத்திச் சபையின் தொழிலாளர் நலன் புரி அதிகாரியும் தங்கியிருந்தார்கள்.

## தடுத்துவைக்கப்பட்டமைக்கு எதிராக

# மான நட்டம் கோரி அதிகாரி மீது வழக்கு

(மாத்தறை)

எதுவித குற்றமும்செய்யாத தன்னை கைது செய்து ஐந்து தினங்கள் தடுத்து வைத்திருந்ததாக அக்மீமனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீது காலி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அக்மீமனையில் உள்ளமானவில என்ற இடத்தைப் புத்ததாச விதானாச்சி என்ற விவசாயி தாக்கல்செய்த இவ்வழக்கில் எத்தவித குற்றமும் செய்யாத தன்னை ஐந்து தினங்கள் தடுத்து வைத்தமையால் பெரும் அவமானம் ஏற்பட்டிருப்பதாகவும் ஒரு லட்சம்ரூபா நட்டஈடு தரப்பட வேண்டுமெனவும்,கோரியுள்ளார்.

1987 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி இரவு முதல் ஐந்து தினங்கள் பணயக்கைதியாக வைத்திருந்துபின்சட்ட ஆலோசனைக்கு இணங்க 1987 ஆம் ஆண்டு ஜூலை 5ஆம்திகதிவிடுதலை செய்யப்பட்டதாகவும், தான் தடுத்துவைக்கப்பட்டமை நேர்மையீனமான செயல் எனவும் அவர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# மலையக மாணவர்கள் வடக்கே செல்ல மாட்டார்

## - தொண்டமான்

(கொழும்பு)

மலையகத்தைச் சேர்ந்த மாணவர்கள் தமது உயர் கல்வியைப் பெறுவதற்கு வடக்கு, கிழக்கைச் சேர்ந்த யாழ்ப்பாண பல்கலைக்கழகம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அம் மாணவர்கள் இன்றையசூழ்நிலையில் மேற்படி பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்படமாட்டார்கள் என கிராமிய கைத்தொழில் அமைச்சர்எஸ்.தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இவர்கள் பேராதனை பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகங்கள்ஆகியவற்றில் படிப்பைத் தொடர்வதற்கு ஏற்பாடுகள், வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# செவ்வாய் விடுமுறை

நாளை வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கும் பொருட்டு சகல வர்த்தகநிலையங்களையும் மூடிவைக்குமாறு வட பிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது மகாசிவராத்திரி தினத்தை வர்த்தக ஊழியர்கள் கடைப்பிடிக்கும் முகமாகஇந்த விடுமுறை வழங்கப்பட வேண்டுமென வர்த்தக ஊழியர் சங்கம் தனதுகோரிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளது.

# திருமுறைப் பாராயணம்

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி ஆலயம், கந்தர்மடம் ஆத்திசூடி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம், திருவண்ணை நகர் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி ஆலயம், நாயன்மார்கட்டு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலயம், அரியாலை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம், ஸ்ரீஞான வைரவர் ஆலயம், இத்துடன் மேலும் பல ஆலயங்கள் தோறும் சென்று திருமுறைப் பாராயணம் செய்யவுள்ளனர்.

# 23-ம் ஆண்டு நினைவஞ்சலி



அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற
ஸ்தாபகர்
அமரர் சங்கீத பூஷணம்

## ஆ. நமசிவாயம்

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

தமிழகம்
பணிக்கர்வளவு
திருநெல்வேலி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரர்கள்.

(2252)

# நினைவு கூருகின்றோம்

1992-03-02

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ செல்லத்தம்பி - சுப்பிரமணியம்
வந்தாறுமூலை,மட்டக்களப்பு]

பொகவந்தலாவையில் சிங்களக் காடையர்களினால் வெட்டிக் கொல்லப்பட்ட 'கிறிடுவில்' தோட்டக் கங்காணி.

1987ஆம் ஆண்டு மணியரசன்குளம் பகுதியில் மாட்டு வண்டியில் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ அப்துல்லா [ஆ. அருட்பிரகாசம் சுந்தளாய்,
திருக்கோணமலை]

1989ஆம் ஆண்டு மணலாறு, அளம்பில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய -

மேஜர் கமல் [அருணாசலம் தேவர் சுந்தரராஜன் -
4ஆம் வாய்க்கால், கிளிநொச்சி]

இதேபகுதியில்இந்தியப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

லெப். குகேந்திரன் [குருகுலசிங்கம்
அரசரத்தினம் ஆசிகுளம், வவுனியா]

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மூளைக்காய்ச்சல் நோயின் காரணமாக எம்மைப் பிரிந்த -

மெண்டிஸ் [குணம் சந்திரசேகரம் -
அளவெட்டி வடக்கு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி/3988)

மாநகர ... யாழ்ப்பாணம்

# தொழில் வாய்ப்புப் பெற சிறிலங்கா அரசு தடை

(கொழும்பு)

லிபியாவில் தொழில் வாய்ப்பு பெற்று இலங்கையர்கள் செல்வதற்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளது. அண்மையில் லிபியாவில் தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்ற சில இலங்கையர்கள் துன்புறுத்தப்பட்டதையும், தொழிலாளர்களது விருப்பத்திற்கு மாறாக அரபுத் தொழில் கொள்வோரால் தடுத்து வைக்கப்பட்டதையும் அடுத்து அரசாங்கம் இம்முடிவைஎடுத்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

இவ்வாறு லிபியா சென்றவர்கள் தொடர்பான நெருக்கடி முடிவுறும்வரையில் லிபியாவிற்கு தொழில் வாய்ப்புக்குச்செல்வது சட்டபூர்வமாகத் தடுப்பதாகவும், இது உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

### உள்துறை அமைச்சர் ஏற்பாட்டில்

# எட்டுமாநில முதல்வர்கள் புதுடில்லியில் சந்திப்பு

(டில்லி)

பயங்கரவாதம் மற்றும் வன்முறைகள் சம்பந்தமான பிரச்சினைகளைச் சமாளிப்பது தொடர்பாக ஆராய இந்திய உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் எட்டு மாநிலங்களின் முதலமைச்சர்கள் கூட்டம் ஒன்றுக்கு அழைத்துள்ளார்

புதுடில்லியில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்திற்கு பஞ்சாப், ஹரியானா, உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத் இமாசலப்பிரதேசம், ராஜஸ்தான். மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் புதுடில்லியின் துணைநிலை ஆளுநரும் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளார்

# அணு ஆயுத உற்பத்தியில் மத்திய கிழக்கு சுறுசுறுப்பு

(லண்டன்)

மத்திய கிழக்கு நாடுகள் தங்கள் அணுசக்தி இரசாயன நச்சுக்கிருமி ஆயுதங்களை செய்வதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளன என்றும், அவற்றை நிறுத்தும் முயற்சி காலம் கடந்த ஒன்றாகி விட்டது என்றும் பிரித்தானிய சர்வதேச விவகார ரோயல் கழகத்தைச் சேர்ந்த அரசியல் விமர்சகரான பேராசிரியர் டிரிவோர் டேய்லர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் கேந்திர ஆயுதப் பரவலை நிறுத்துவது என்பது குதிரை வெளியே ஓடிய பின் லாயத்தை மூடிய கதைக்கு ஒப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார்;

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தங்கள் கையிருப்பில் உள்ள ஆயுதங்களை குறைந்த விலையில் விற்க முயல்வதும், முன்னாள் சோவியத் யூனியனின் அணு ஆயுதங்கள் துண்டு படிருப்பதும், அரபு இஸ்ரேல் சமாதானப் பேச்சுக்களில் தாமதமான முன்னேற்றமும் இத்தகைய நிலைக்குக் காரணமாகவுள்ளன என்றும்.

அணுசக்தி அறிவும், நீண்டதூர ஏவாயுதங்கள் பரவுவது மேற்கு நாடுகளுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளன என்றும் அந்தப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

# சோவியத்விஞ்ஞானிகளுடன் இந்தியா தொடர்பு

மூன்றாம் உலக நாடுகளின் இராணுவ சக்தியை விரிவுபடுத்துவதில் முன்னாள்சோவியத் விஞ்ஞான நிபுணர்கள் உதவக்கூடும் என அமெரிக்க உளவு தாபனமாகிய சி.ஐ.ஏ யின்நிர்வாகி ரொபாட்கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கசெனட்டில் பேசிய ரொபர்ட் கேட்ஸ் முன்னாள் சோவியத் விஞ்ஞானிகளின் நிலை குறித்து தெரிவிக்கும் போது இவ்வாறு குறிப்பிட்டார்

இந்தியா, கியூபா, சிரியா, எகிப்து. அல்ஜீரியா ஆகிய நாடுகள் சோவியத் விஞ்ஞானிகளுடன் தொடர்பு கொள்ளக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய வரவு- செலவின் பங்கீட்டு வீதம்

(டில்லி)

மத்திய அரசுக்கு வருமானமும் செலவீடும் எந்தச் சதவிகிதத்தில் அமைந்துள்ளது என்பது பற்றி வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்து பேசிய நிதியமைச்சர் டாக்டர் மன் மோகன் சிங் சுவையாகத் தெரிவித்தார்.

இதன்படி மத்திய அரசுக்கு கிடைக்கும் ஒரு ரூபா வருமானத்தில் இருபத்துமூன்று பைசா ஆயத் தீர்வையினாலும் பதினெட்டு பைசா உள்நாட்டு கடன் மூலமும். மூன்று பைசா வெளிநாட்டுக் கடன் மூலமும், ஆறு பைசா வருமான வரி மூலமும், ஆறுபைசா மூலதன வருவாயினாலும், பதினெட்டுப் பைசா சுங்க வரிமூலமும் பெறப்படுகின்றது

இந்த வருமானத்திலிருந்து இருபத்துமூன்று பைசா வட்டிக்காகவும், பதினான்கு பைசா மாநிலங்களுக்கும், பதின்மூன்று பைசா மத்திய திட்டத்திற்காகவும், பதின்மூன்று பைசா பாதுகாப்பு செலவினங்களுக்கும், பத்தொன்பது பைசா மானிலத் திட்டங்களுக்கும், மானியங்களுக்கும், பன்னிரண்டு பைசா திட்டமிடாச் செலவினமாகவும், செலவிடப்படுகின்றது எனவும் விளக்கினார்.

# தீங்கு விளைவிக்கும் மருந்து ஆசியாவில் விற்பனை

(மணிலா)

ஆசியாவின் பல நாடுகளில் தீங்கு விளைவிக்கக் கூடிய மருந்துகள் மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக இருக்கின்றன என்று வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மணிலாவில், சர்வதேச பாவனையாளர் சங்கங்கள் ஒன்றியத்தைச் சேர்ந்த டாக்டர் கே. பாலசுப்பிரமணியம் இது பற்றிக் குறிப்பிடுகையில்;

ஆசிய நாடுகளில் வர்த்தகக் கொம்பனியின் பெயருடன் ஆயிரக்கணக்கான மருந்து வகைகள் விநியோகிக்கப்படுகின்றன என்றும்,

சில மருந்துகள் எந்தவித பயனும் அற்றவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# சோவியத்தை சீர்குலைக்க றீகன் - பாப்பரசர் சதி

(நியூயோர்க்)

போலாந்தில் சட்ட விரோதமாக்கப்பட்ட சொலிடாரிட்டியூனியனை உயிர்த் துடிப்புடன் வைத்திருக்கவும் கிழக்கைரோப்பாவில் சோவியத்தின் கட்டுப்பாட்டை ஆட்டம் காணச் செய்யவும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றீகனும், பாப்பரசர் இரண்டாவது ஜோன் போலும் இரகசிய சதித்திட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்ததாக 'டைம்' சஞ்சிகை கூறியுள்ளது

1982 ஆம் ஆண்டு யூன் 7 ஆம் திகதி வத்திக்கானில் இருவருக்குமிடையே இதற்கான இணக்கம் காணப்பட்டதாகவும்,

சோவியத் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கவும், வார்ஸோ ஒப்பந்த நாடுகளுடனான சோவியத்தின் தொடர்பினைத் தளர்த்தவும் சோவியத் ஏகாதிபத்தியத்தில் சீர்திருத்தத்தை நிர்ப்பந்தமாகப் புகுத்தவும் வழி செய்யும் பெரிய ஒரு இலக்கின் ஒரு பகுதியாக இசசதி அமைந்ததாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

-டைம்

### துப்பாக்கியால் சுட்டு

# பாதுகாப்பு அலுவலகத்தின் பெயர்ப்பலகை திறப்பு

தனக்கு பாதுகாப்பு வழங்கும் சிறப்பு பாதுகாப்பு படைபிரிவின், அலுவலக பெயர்ப் பலகையை துப்பாக்கியால் சுட்டுத் திறந்து வைத்தார் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா

கடந்த எட்டு மாதங்களாக 25 கறுப்புப் பூனைப்படை வீரர்கள் ஜெயலலிதாவிற்கு பாதுகாப்பு அளித்து வருகின்றனர் மத்திய உள்துறை, அந்த கறுப்பு பூனைகளை திருப்பி அனுப்பும்படி அவ்வப்போது தமிழக அரசை கேட்டு வந்தது.

எனவே ஜெயலலிதாவின் பாதுகாப்பிற்காக தமிழக அரசே சிறப்புப் பாதுகாப்பு படையை ஏற்படுத்தியது. அதில் 120 பொலிஸ்காரர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சிறப்புப் பாதுகாப்பு படைப் பிரிவின் அலுவலகத்தின் பெயர்ப் பலகையையே செல்வி ஜெயலலிதா ஒரு துப்பாக்கியால் சுட்டு திறந்து வைத்தார்.

### ரஷ்யாவில் திடீர் புரட்சி வழக்கு

# விசாரணையை நிறுத்த துணை அதிபர் கோரிக்கை

(மொஸ்கோ)

முன்னாள் சோவியத் யூனியனில் கடந்த ஆண்டு திடீர்ப் புரட்சியில் ஈடுபட்ட தலைவர்கள் மீதான வழக்கு விசாரணையை ரத்துச் செய்யுமாறு ரஷ்ய துணை அதிபர் அலெக்சாண்டர் ரஸ்தோனிக் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பழமைவாத கம்யூனிஸ்ட்டுக்கள் என்று கருதப்படும் தலைவர்களை விடுவிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் உளவு விசாரணை அமைப்பின் முன்னாள் தலைவர், முன்னாள் பிரதமமந்திரி, முன்னாள் முதலாவது துணை அதிபர் ஆகியோர் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளனர்.

# ரஷ்யா தென்னாபிரிக்க இராஜீக உறவு

(மொஸ்கோ)

ரஷ்யாவும் தென்னாபிரிக்காவும் மீண்டும் ராஜீக தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

முப்பத்தியாறு வாரங்களுக்குப் பிறகு இதற்கான ஒப்பந்தத்தை பிரிடோரியாவில் தென்னாபிரிக்க, ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

# பரபரப்பான ஆட்டத்தில் இந்தியா அவுஸ். தோல்வி

(சிட்னி)

பிறிஸ்பேனில நேற்று நடைபெற்ற உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி இந்திய அணியைத் தோற்கடித்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 47 ஓவர்களில் ஒன்பது விக்கட் இழப்பிற்கு 235 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணி அனைத்து ஆட்டக்காரர்களையும் இழந்த கடைசிப் பந்தில் 234 ஓட்டங்களைப் பெற்றது.

ஐம்பது ஓவர்களைக் கொண்ட போட்டியாக இருந்த போதும் மழை காரணமாக மூன்று ஓவர்களை விளையாட அவுஸ்திரேலியாவிற்கு முடியாமல் போனதால் இந்தியவும் 47 ஓவர்களையே விளையாடியது. இறுதிவரை விளையாட்டு விறுவிறுப்பாகவே இருந்ததாக வர்ணனையாளர்கள் தெரிவித்திருந்தனர்

அடிலேடில் இங்கிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே நடைபெற்ற உலக கிண்ணப் போட்டித் தொடரின் மற்றோர் ஆட்டம் நேற்று மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

பாகிஸ்தான் 40.2 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 74 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இங்கிலாந்து 8 ஓவர்களில் ஒரு விக்கட் இழப்பிற்கு 24 ஓட்டங்களை எடுத்த நிலையில் மழை காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டது.

### கம்போடியாவிற்கு

# ஐ. நா. அமைதிப்படை விரைவில் செல்லவுள்ளது

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைகம்போடியாவிற்குஅமைதிகாப்பு படையொன்றை அனுப்பத் தீர்மானிதுள்ளது. இருபத்திரண்டாயிரம் துருப்புகளைக் கொண்ட இருபடையை அனுப்புவதென ஐ நா. பாதுகாப்புச்சபை ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது இந்த துருப்புக்களை அனுப்புவதற்கு 95 மில்லியன் டாலர்கள் செலவிடப்படவுள்ளது.

### வளைகுடா யுத்தத்தினால்

# நாடு திரும்பியோருக்கு நட்டஈடு வழங்கப்படும்

(கொழும்பு)

வளைகுடா யுத்தம் காரணமாக குவைற், ஈராக் ஆகிய நாடுகளில் வேலைவாய்ப்பைக் கைவிட்டு நாடுதிரும்பிய இலங்கையர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு ஐ. நா. சபையின் நஷ்டஈட்டு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொருவரும் 2500 அமெரிக்க டொலரை நஷ்டஈடாக பெற்றுக் கொள்ள உரித்துடையவர்கள் என்றும்,

ஒரு குடும்பத்திற்கான நஷ்டஈட்டுத் தொகை 5000 டொலர்கள் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது

இதுவரை 83. 400 பேர் இலங்கை வெளிநாட்டுவேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

யாழ் மாவட்டபட்டு மொத்தம் 15 இயக்குனர்களைக் கொண்ட சபையாகச் செயற்படுகின்றது. இச் சபையில் தற்போது திரு.ச.முருகநேசன் அவர்கள் தலைவராகவும், திரு க மகாதேவன் அவர்கள் உப தலைவராகவும் நற்பணியாற்றி வருகின்றனர். இவர்களின்காலத்தில் சமாசம் நிர்ணயித்த இலக்குகளை வெற்றிகரமாகவும், போற்றப்படும் தன்மையிலும் அடைந்து வீறுநடை போடுகின்றது இந்த மேன்மையில் சமாசத்தில் தங்களை அர்ப்பணித்து கடமையாற்றும் உத்தியோகத்தர்களினது பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் எதிர்கால வளர்ச்சிக்கென ஊழியர்களின் பணியுடன் 44 மாற்று முகவர்கள் என்னும் தொண்டர்களின் செயற்பாட்டினாலும் ஆயிரக்கணக்கான சி. க. கூ சங்க கௌரவ சேவையாளர்களின் அயராத உழைப்பினாலும் விரைவில் அமரர் திரு. ச ஞானப்பிரகாசம் அவர்களின் கனவின் கனியாக யாழ் மாவட்ட சி.க.கூ. சங்க சமாசமானது யாழ் மாவட்டத்தில் நற்பயன் அளிக்கும் சிறந்த கூட்டுறவு வங்கியாக உதயமாகி பிரகாசிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஒரு தசாப்த கால நிறைவில் சிறப்பான சேவையாற்றி பெருமை பெறும் இந்த நற்பணி மேன்மேலும் நானிலம் போற்ற ஞாலம் மீது நலிவுறாத ஒளியாகஞாயிறு போல் பிரகாசித்து வளர்ந்து நீடூழி வாழவாழ்த்துகிறோம்.

# யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின்

# [1982] 10-வது ஆண்டுதின சிறப்புமலர் [1992]

## ஒரு தசாப்த நிறைவு

02 - 03 - 1992

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சிக்கன கடன் வழங்கு. கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்ப காலங்களில் ஐக்கிய நாணய சங்கங்கள் என்ற பெயரில் உதயமாகி கிட்டத்தட்ட 75 வருட வரலாறு கொண்டதாகும். 1982 ஆம் ஆண்டு வரையில் இச் சங்கங்கள் தனித்தனி அமைப்புக்களாகவே செயற்பட்டு வந்துள்ளன. இந்த அமைப்புக்களின் வளர்ச்சிக்கு உற்ற துணையாக கூட்டுறவு வங்கியொன்று அமைக்கப்பட்டு துரித முன்னேற்றம் கண்ட காலத்தில் அதாவது 1972 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் இவ்வங்கி மக்கள் வங்கிக்கு உடைமையாக்கப்பட்டு விட்டது. இந்த எதிர்பாரா இழப்பினால் பாதிப்புற்ற இச்சங்கங்களுக்கு நிதி உதவி வழங்க வேறு எந்த அமைப்பும் முன்வராததினால் இச்சங்கங்கள் வீழ்ச்சி நிலைக்குத் தள்ளப்பட்டன. இந்த வீழ்ச்சி நிலையில் இருந்து இச்சங்கங்களைக் காத்து வளர்க்கும் நல் நோக்குடன் சில கூட்டுறவாளர்கள் மூன் வந்து யாழ்ப்பாண மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசத்தை உதயமாக்கி 1982 ஆம் ஆண்டு பதிவு செய்து செயற்படுத்தி வந்தனர். அக்காலம் தொடக்கம் சங்க அங்கத்தவரிடம் ரூ 10/- வீசம் மாதாந்த சேமிப்பாக நிதி திரட்டப்பட்டு வந்தது.

சிறுதுளி பெருவெள்ளம் என்ற வாக்கியத்திற்கு அமைவாகவும், சிக்கனமாகவும் சிறுகச் சிறுக சேமிக்கப்பட்ட பணம் பெருவெள்ளம் போல் திரண்டுள்ளதை இன்று நாம் காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறு 10 ஆண்டுகளில் திரட்டப்பட்ட நிதி இன்று பல்லாயிரம் மக்களின் நிதி உதவித் தேவைகளை பூர்த்தி செய்வதாக உள்ளதுடன் பல்லாயிரம் பேருக்கு சுய தொழில் புரியும் வாய்ப்பினை வழங்கக் கூடிய நிலையை உருவாக்கி உள்ளது மட்டுமல்லாமல் அதன் அங்கத்தவர்களுக்கு பல வகைச்சேவைகளையும் ஆற்றக் கூடிய கட்டத்தையும் அடைந்துள்ளது. இவ்வாறு யாழ் மாவட்டத்தில் தனது அங்கத்தவர்களுக்குச் சேவையாற்றி வரும் யாழ் மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசமானது 10 வது ஆண்டு நிறைவு தினத்தை இன்று கொண்டாடுகிறது. அள்ள, அள்ள வற்றாத அமுதசுரபி போல் தனது அங்கத்தவர்களுக்கு உகந்து அளிக்கும் இச் சமாசத்தின் வளர்ச்சிப் பணியை வாழ்த்துவதில் மகிழ்கின்றோம், பூரிப்படைகின்றோம்.

1982 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2 ஆந் திகதி யாழ். மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசமாக இக்காலத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமையாற்றியவரும் சமாசத்தின் ஸ்தாபகருமாகிய அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களால் பதிவு செய்யப்பட்டது. இச் சமாசத்தின் ஆரம்ப காலத் தலைவராகத் திரு. வி. கே. சுப்பிரமணியம் அவர்களும், உப தலைவராக திருமதி வேதவல்லி கந்தையா அவர்களும் செயலாளராக திரு. இ. திருநாவுக்கரசு அவர்களும், பொருளாளராக திரு டி. வி. எம். இராசசிங்கம் அவர்களும் பணிபுரிந்து வந்தனர். அக் காலகட்டத்தில் 2300 அங்கத்தவர்களுடைய 52 சங்கங்களே சமாசத்தில் அங்கம் வகித்தன ஆனால் இன்று கடந்த 10 ஆண்டு வளர்ச்சியில் 34,000 அங்கத்தவர்களை உள்ளடக்கிய 460 சி. க. கூ. சங்கங்களை அங்கத்துவமாக கொண்ட சமாசமாகப் பிரகாசிப்பதுடன் பெருந்தொகையான மூலதனத்தையும் கொண்டு அறுகு போல் வேரூன்றி ஆல் போல் தளைத்து வளர்ந்து பல்லாயிரம் மக்கள் அதன் நிழலில் சுகத்தை சுகிக்க உதவும் பெரும் விருட்சமாக உள்ளது.

யாழ் மாவட்ட சி.க.கூ.சங்கங்களின்சமாசத்தின்நோக்கம் யாதெனில் கூட்டுறவுக் கோட்பாடுகளுக்கிணங்க அதன் உறுப்பினர்களுக்கு ஏற்ற பொருளாதார. சமூக கலாசார தேவைகளை நிறைவு செய்வதும் உறுப்பினர்களுக்கிடையில் சிக்கனம் இருவழினொத்த உதவி, தன்னுதவி தொடர்பாக கருத்துக்களையும்பிரயோகத்தையும் விருத்தி செய்வதும், உறுப்புரிமைச் சங்கங்களின் நடவடிக்கைகளை இலகுவாக்குவதும், உறுப்புரிமைச் சங்கங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதும் உறுப்புரிமைச் சங்கங்களின் ஒருமித்த கருத்துக்களை வெளியிடுவதற்கு வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்தலும், உறுப்புரிமைச் சங்கங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வியாபார நடவடிக்கையில் ஈடுபடுதலும், கூட்டுறவுச் சட்டத்திற்கும், விதிகளுக்கும், சமாசத் துணைவிதிக்கும் அமைவாகமாவட்டத்தின்நானாவித அபிவிருத்தி நடவடிக்கைகளிலும்உறுப்புரிமைச்சங்கங்களை பிரதிநிதிப்படுத்தலும் அதனூடே ஒருகூட்டுறவுச் சமூகத்தினை உருவாக்குவதுமாகும்.

சிக்கனமே சிறந்த செல்வம் என்னும் விருது வாக்கியத்தைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசம் தனது அங்கத்தவர்களிடையே சேமிப்பு பழக்கவழக்கத்தை ஊக்குவித்து அத்தகைய சேமிப்பினால் திரட்டிய நிதியிலிருந்து அங்கத்தவர்களின் தொழில் வாய்ப்பிற்கும். வருவாய்க்கும் வேண்டிய மூலதனத்தைப் பெற்றுக்கொள்ள இலகு கடன் அடிப்படையில் அவர்களுக்கு வழங்கி அவர்களுக்கென ஒரு சுய தொழில் வாய்ப்பினை உருவாக்குவதுடன் அத்தொழில் வாய்ப்பின் மூலம் கிடைக்கப்படும் வருமானத்தினால் கடனை சிறுக, சிறுக அடைப்பதுடன் அவரின் வாழ்க்கைத் தரத்தையும் அதிகரிக்கவும்உதவிபுரிந்து அத்துடன் கிராம மட்டத்தில் சிறுவங்கி அமைப்பையும் உருவாக்கி அதன் மூலமும் அங்கத்தவர்களுக்கு வேலை வாய்ப்பினையும் வழங்கி வந்துள்ளது மக்களுக்காக மக்களினால் ஆரம்பிக்கப்பட்ட சி. க. கூ. சங்கங்களின் வங்கி அமைப்பு இன்று மக்களுடனேயே ஒன்றிணைந்து மக்களுக்கே அதன் நற் சேவையை மேற்கொள்கின்றது. யாழ். மாவட்டத்தில் இன்று 80 கிராமிய சி. க. கூ. சங்கங்களின் வங்கி அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. இவ்வாறு சி க கூ. சங்கங்களின் சமாசமானது நல் வளர்ச்சி அடைந்ததற்கு சி க கூ. சங்க ஸ்தாபகர் அமரர் திரு ச. ஞானப்பிரகாசம் அவர்களும், திருமதி வேதவல்லி கந்தையா அவர்களும் மற்றும் ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை இயங்கி வந்த இயக்குனர்சபைகளும் சி. க. கூ. சங்கங்களின் ஒத்துழைப்பும் சமாசத்தில் கடமையாற்றிய ஊழியர்களின் அயராத சேவை மனப்பான்மையுள்ள உழைப்புமே என்று கூறினும் அவை மிகையாகாது.

சமாசமானது தனது வளர்ச்சிக்கேற்ப அங்கத்தவர்களுக்கு தேவையெனக்கருதும் பல,பல திட்டங்களைஉருவாக்கி அதன் மூலம் அங்கத்தவர்களுக்குநிதி உதவியும் புரிந்து வருகின்றது. சாதாரண கடன், சுயமுயற்சிக் கடன், விவசாயக் கடன், திட்டக்கடன், உயர்கல்விக்கடன், விதவைகள்கடன்,வறியமக்கள் கடன், வெளிநாட்டுக் கடன், (HIVOS) வியாபாரக் கடன், வீடமைப்புக் கடன் குறுகிய காலக் கடன், பண்டிகைக் கடன் எனப்பல வழிகள் வாயிலாக கடன்களை வழங்குகின்றது. இவ்வாறான நிதிகளை வழங்குவதற்கு சமாசம்ஆனது பின்வரும் வழிகள் மூலம் நிதிகளைத் திரட்டி வருகின்றது,

மாதாந்த சேமிப்புத்திட்டம் நிலையான வைப்புத்திட்டம், மாணவர் சேமிப்புத் திட்டம், பரிசூதிய சேமிப்புத் திட்டம். தேசிய வீடமைப்புஅபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறப்படும் கடன் திட்டம். "கிவோஸ்" எனப்படும் நெதர்லாந்து நிறுவனத்திடமிருந்து இலங்கை சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்க சம்மேளனத்தின் மூலம் பெறப்பட்ட நிதி ஆகியவற்றின் ஊடாகவே பெறப்படுகின்றது இவற்றோடு மட்டும் நின்று விடாது மரண சகாயநிதித் திட்டம் மூலமும் அங்கத்தவரிடமிருந்து மாதாந்த சந்தாவாக சிறுதொகையைப் பெற்று இழப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவரின் பின்னுரித்தாளிக்கு நன்கொடை வழங்கும் திட்டமும் செயற்படுத்தப்படுகின்றது. மேலும் தனித்து நிதி திரட்டுவதோடல்லாமல் அங்கத்தவர்களுக்கு வேண்டிய கூட்டுறவுக் கல்வியும்,பொருளாளர் பயிற்சியும், தலைமைத்துவ பயிற்சிகளும், மாற்றுமுகவர் பயிற்சிகளும், மகளிருக்கான பயிற்சிகளும், சமாச கல்வி விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. எமது பிரதேசத்தில் இலைமறை காயாக இருக்கும் கலைகளை வெளிக்கொண்டு வந்து பிரபல்யப்படுத்தும் வசதிகள் சங்கங்கள் மூலமும்,பிராந்தியசபைகள்மூலம், யாழ் மாவட்ட சமாசத்தின் மூலம் தவறாது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது சி க.கூ. சங்க அமைப்பானது தனிநபர் ஒருவருடன் தொடங்கி உலக ரீதியான அமைப்பு வரையில் தொடர்புடைய விரிவாக்கம் கொண்டதாகும் இச் சங்கிலித் தொடர் தனிநபர், சி க கூ. சங்கம், சங்கங்களின் கொத்தணி அமைப்பு, பிராந்தியசபை அமைப்பு, மாவட்ட சமாசம், தேசிய மட்ட சம்மேளனம், ஆசிய கடன்வழங்கு கூட்டு சம்மேளனம்(ACCU), உலககடன் வழங்கு சபை(WOCCU) என்ற கோர்வையில் இணைக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் சமாசத்தின் உள் அமைப்பாக தற்போது 44 கொத்தணி அமைப்புகளும், 14 உதவி அரசாங்க பிரிவுகளில் 14 பிராந்திய சபைகளும் உள்ளன இந்த சமாசத்தின் இயக்குனர் சபையாக ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒவ்வொருவர் தெரிவு செய்யப்படும் ஒருவர் மாவட்ட ரீதியில் பொதுப் பிரதிநிதியாகவும் தெரிவு செய்யப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

அ.மை.ராஜ்குமார் பி.பி.ஏ
மாவட்டச் செயலாளர்
யாழ் மாவட்ட சி. க. கூ.
சங்கங்களின் சமாசம்

1982

யாழ். மாவட்டத்தின் சிறந்த கூட்டுறவு வங்கியாக எதிர்காலத்தில் மிளிர்ந்து இப்பிரதேசத்தின் மக்களுக்கு மேலும் நற்சேவை ஆற்ற வேண்டுமென்று இன்று 10. வது ஆண்டு தினத்தைக் கொண்டாடும் யாழ் மாவட்ட சிக்கனக்கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தினை வாழ்த்துகிறோம்.

1992

யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் பிராந்திய சபைகள்.

1. நெடுந்தீவு 2. வேலணை 3. ஊர்காவற்றுறை 4. சங்கானை
5. சண்டிலிப்பாய் 6. உடுவில் 7. தெல்லிப்பழை 8. யாழ்ப்பாணம்
9. நல்லூர் 10 கோப்பாய் 11. சாவகச்சேரி 12. கரவெட்டி
13. பருத்தித்துறை 14. வடமராட்சி கிழக்கு

## ஆசிச்செய்தி

கூட்டுறவு இயக்கம் ஐக்கிய நாணய சங்கங்களின் தேற்றத்துடன் எமது நாட்டில் வேரூன்றத் தொடங்கியது. நாட்டிலேற்பட்ட பொருளாதார, சமூக அரசியல் காரணிகளால் காலத்திற்குக் காலம் கூட்டுறவு இயக்கத்தின் அமைப்பு முறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. இம் மாற்றங்கள் கூட்டுறவு இயக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும் நாட்டின் சமூக, பொருளாதார மேம்பாட்டில் இன்றும் ஒரு தனியிடம் இருந்து வருவதை மறுக்க முடியாது இந்த நிலைமையாழ் மாவட்டத்திற்கும் பொருத்தம் உடையதாகும். யாழ். மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கம் பல துறைகளில் வியாபித்து முன்னணியிற் செயற்பட்டுள்ளது இதற்கான முக்கிய காரணம் கிராமிய மட்டத்தில் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாணய சங்கங்களும், அச்சங்கங்கள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கூட்டுறவாளர்களும் ஆகும்

யாழ். மாவட்டத்தில் எண்ணூற்றுக்கு அதிகமான ஐக்கிய நாணய சங்கங்களும் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும் இருக்கின்றன இச் சங்கங்கள் யாவற்றையும் பராமரிக்கும், மேற்பார்வை செய்யும் தாய்ச் சங்கமாக யாழ்ப்பாணம் மாவட்டச் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கசமாசம் இருந்து வருகின்றது இச்சமாசம்1982.03.02ந் திகதியிற் பதிவு செய்யப்பட்டதாகும். தற்போது 450 அங்கத்துவ சங்கங்கள் இச்சமாசம் மூலம் பல்வகைக் கடன் திட்டங்களின் கீழ் அங்கத்தவர்களுக்கு கடன் வசதிகளைச் செய்து கொடுப்பதுடன் கிராமிய மட்டத்தில் சேமிப்புத் திட்டத்தை உருவாக்கி அமுல்படுத்தும் நிறுவனமாகவும் இருந்து வருகின்றது கிராமிய மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தையும், கூட்டுறவு மீதான நம்பிக்கையையும் ஊட்டுமுகமாக பலவகைப் பயிற்சிகளையும். கருத்தரங்குகளையும் அதன் வெளிக்கள உத்தியோகத்தர் மூலமாக அமுல்படுத்துவதன் மூலம் கூட்டுறவு இயக்கம் மேலும் விரிவடைவதற்கான ஒரு வேலைத் திட்டத்தை அமுலாக்கி வருகின்றது.

இன்று 2ந் திகதி இச் சமாசம் தனது 10வது நிறைவு ஆண்டைக் கொண்டாடுகின்றது. இத்தருணத்தில் இச்சமாசம் தொடர்ந்தும் பல்வகை அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டு எமது மக்களுக்குச் சிறப்புச் சேவையாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுடன் சமாசத்தில் எல்லா அபிவிருத்தி முயற்சிகளும் திறம்பட நடக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

செ.லிங்கநாதன்
கூ. அ. உ ஆணையாளர் (அபிவிருத்தி) யாழ். மாவட்டம்
(2250)

## சிக்கனமே சிறந்த செல்வம்

## ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒருவருக்காகவும்

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

விவேகத்திற்குத் தந்தை அனுபவம்; தாய் நினைவாற்றல்.
— தாமஸ் ஃபுல்சர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 02-03-1992
தொலைபேசி

# இராணுவத் தீர்விற்கு புலிகளின் பதிலடி

கடந்த இரண்டு மாதங்களாக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல்கள் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வைக் கண்டு விடலாம் என்ற சிறிலங்கா அரசாங்கத்தின் அணுகுமுறைக்குக் கிடைத்த பலமான அடியாகும்.

கிழக்கில் புலிகளை ஒடுக்கி விட்டோம். வடக்கிலும் புலிகளை யாழ் குடாநாட்டிற்குள் முடக்கி விட்டோம் எனப் பிரசாரம் செய்து வந்த சிறிலங்கா அரசாங்கத்திற்கு கிழக்கிலும், குடாநாட்டிற்கு வெளியிலும், புலிகள் மேற்கொண்ட துணிகர, வெற்றிகரமான தாக்குதல்கள் இராணுவ வெற்றியின் மூலம் இனப்பிரச்சினைக்கு ஓர் தீர்வுத்திட்டத்தை திணித்து விடலாம் என்ற எண்ணத்திற்கு பெரும் சவாலாகவும் முட்டுக் கட்டையாகவும் எழுந்துள்ளது.

மேலும், புலிகள் தற்பொழுது மேற்கொண்டுள்ள புதியபோர்த் தந்திரோபாயம் இராணுவத்திற்கு பெரும் உயிரிழப்பை ஏற்படுத்தியுள்ள அதேவேளை பெருந்தொகையான நவீன ஆயுதங்களையும் புலிகளிடம் பறிகொடுக்க வேண்டிய நிலையையும், ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம், புலிகள் மேலும் பலம் பெறும் நிலையும் உருவாகியுள்ளது. புலிகளைப் பொறுத்து, புதிய தந்திரோபாயமானது பெருவெற்றியை அளித்துள்ளது. இழப்புக்களையும் கணிசமான அளவு குறைத்தும் உள்ளது. இதேவேளை இராணுவத்தினருக்கு தற்பொழுது உள்ள தமது பாதுகாப்பு முறையில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளதோடு அவர்களின் வழமையான நடவடிக்கைகள் - கிழக்கில் ரோந்து போன்றவை பெரிதும் பாதிப்படையச் செய்துள்ளமையால் அவர்களின் மனோநிலையும் பாதிப்படைந்துள்ளது மேலும், வடக்கில் 'அகலக் கால் வைத்தால்' இராணுவம் பாரிய இழப்புக்களையும் சந்திக்க வேண்டி வரும் என்பதையும் புகட்டியுள்ளது.

ஆனால், இதனைச் சிறிலங்கா இராணுவத் தரப்பினரோ, அரசதரப்பினரோ முன்னர் எண்ணியிருக்கவில்லை, போர்த் தந்திரோபாயம் என்பது தங்கள் இஷ்டத்தின் படியும், தாங்கள் வகுத்தது போன்றுமே நடைபெறும் என சிறிலங்கா இராணுவத்தரப்பு திட்டமிட்டு செயலாற்றி வந்தது. மேலும், கடந்த காலத்தில் வடக்கு கிழக்கில் நடந்த போர்களைப் பற்றியும் சிறிலங்கா இராணுவத் தரப்பும் அரசாங்கமும் சரியாகக்கணிப்பிடத் தவறி விட்டன.

விடுதலைப் புலிகளுக்கும் - இந்திய இராணுவத்திற்கும் இடையில் ஏற்பட்ட போரையும், இறுதியில் இந்திய இராணுவம் போர் முனையில் தோல்வி கண்டதையும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் சரியாகக் கணிப்பிட்டிருப்பின் இராணுவவெற்றியைப் பெற்றுவிட முடியாது என்பதைத் தெளிவாகப் புரிந்திருக்கலாம்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியா தனது முழுப் பலத்தையும் பிரயோகித்துப் போராடவில்லை எனவும், புலிகளை முழுமையாக அழித்துவிட இந்தியா விரும்பவில்லை எனவும் சிறிலங்கா தவறான ஒரு கணிப்பீட்டையே கொண்டிருந்தது. ஆனால், உண்மை நிலை அவ்வாறு இல்லை. இந்தியா தன்னாலான முயற்சிகள் சகலவற்றையும் மேற்கொண்டே தோல்வி கண்டது.

வன்னிப் பிராந்தியத்திலேயே விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்தினருக்கும் இடையில் பெரும் சண்டைகள் நடைபெற்றன. ஆனால், இது குறித்து பெரியளவில் செய்திகள் வெளியுலகை எட்டவில்லை. ஆனால், இலங்கையில் இந்திய இராணுவத்திற்கு தளபதியாக இருந்த ஹர்கிரட்சிங் அண்மையில் அதை வெளியிட்டிருந்தார். ''யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகள் வவுனியா காட்டிற்குச் சென்ற பின்னரே உண்மையான போர் நடந்தது'' என்று அவர் குறிப்பிட்டார்.

இந் நிலையில் சிறிலங்கா அரசாங்கம், இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு கண்டுவிட முடியாது என்பதையும் விடுதலைப் புலிகள் ஏனைய தமிழ் அமைப்புக்கள் போன்று, பிறரில் தங்கியிருப்பவர்கள் அல்லர் என்பதையும், ஜே வி.பி போன்று இராணுவ அடிப்படைத் தந்திரோபாயங்கள் அறியாதவர்கள் அல்லர் என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும். அத்தோடு உலகிலேயே செயற்பாடு மிக்க தலைமையைக் கொண்டவர்கள் என்பதையும் புரிந்து கொண்டு இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து முடிவுகள் மேற்கொள்வது சிறந்தது; பயனுடையது.

கம்உதாவ, மகாபொல

# கொண்டாட்ட செலவினத்திற்கு பெருந்தோட்ட வருமானம்

- டியூ. குணசேகரா

(தலவாக்கொல்லை)

கம்உதாவ, மகாபொல, சிரசங்கமே தினகூட்டங்கள் போன்றவற்றிற்கே பெருந்தோட்டத்துறை மூலமாகவே கிடைக்கும் வருமானம் செலவிடப்படுகின்றது என்று முன்னாள் கலவால தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் டியூ குணசேகரா தெரிவித்துள்ளார்.

தலவாக்கொல்லையில் இடம்பெற்றகூட்டமொன்றில் பேசியடியூ குணசேகராதோட்டங்களை தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும் என உலக வங்கி நிர்ப்பந்தித்ததனாலேயே இலங்கை அரசு தனியாரிடம் தோட்டங்களை கையளிக்கின்றது என்றும், அரசாங்கம் கூறுவது போல தோட்டத்துறை நட்டத்தில் நடக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தோட்டங்கள் வெளிநாட்டுக் கம்பெனிகளிடம் இருந்து அரசுடைமையாக்கப்பட்ட போது அது சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க கமிசன் ஒன்று நியமிக்கப்பட்டது. அந்த கமிசன் அப்போது தெரிவித்திருக்கும் கருத்துக்கள் "வெளிநாட்டுக் கம்பனிகள் வருமானவரிகட்டி இருக்கவில்லை. இரகசியமாக பெருந்தொகைப் பணம் வெளிநாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டன." என்பது ஆகும்.

இவ்வாறு நிர்வாக ஊழலால் நட்டம் ஏற்பட்டால் அரசே அதனைபொறுப்பேற்க வேண்டும் என்றும் டியூ. குணசேகரா கருத்துத் தெரிவித்துள்ளார்.

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். புதிய உயர் கல்லூரியின் சமூக சேவைப் பிரிவான தென்றல் குழுவிற்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அண்மையில் நடைபெற்ற நிர்வாகிகள் தெரிவுக் கூட்டத்தில் திரு. பிரபாகரன் தலைவராகவும், செயலாளராக லோ. சொரூபாவும் பொருளாளராக பா. ஜெனியும் தெரிவு செய்யப்பட்டனர். தென்றல் ஆலோசகராக திரு. அ. குமாரவேல் கடமையாற்றுவார்.

சேமலாப நிதியைப்பெற

## விண்ணப்பித்த பலருக்கு இன்னமும் கிடைக்கவில்லை

(பண்டாரவளை)

சேமலாப நிதியைப் பெறுவதற்காக விண்ணப்பம் செய்த அநேக தோட்டத் தொழிலாளர்களுக்கு அது நேர காலத்தில் கிடைக்காதிருப்பதனால் வயது முதிர்ந்த பருவத்திலும் அவர்கள் எல்லையற்ற சிரமங்களை அனுபவிக்கிறார்கள் என்று ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அப்புத்தளை அமைப்பாளர் ஸி. வி. ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பம் செய்துள்ளவர்களுக்கு காலதாமதமின்றி இந்த நிதி கிடைத்திட தொழில் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

## வவுனியாவிற்கு கடுகதி ரயில் சேவை

(கொழும்பு)

வவுனியா - கொழும்பு இன்ரசிற்றி கடுகதி ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்க இருப்பதாக பரிசீலனை செய்யப்படுவதாக போக்குவரத்து அமைச்சர் விஜயபால மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பல வருடங்களுக்குப் பின்னர் வவுனியாவுக்கு கடந்த வியாழன் இரவு மெயில் ரெயில்சேவையையும் ஆரம்பித்துள்ளது

தகவல் தொடர்பு சாதனங்களில்

# அரசின் செல்வாக்கு செய்திகளை பாதிக்கும்

தகவல் தொடர்பு சாதனங்களில் அரசின் ஊடுருவல் பூரணமாக உறிஞ்சும் கட்டத்தை எட்டிவிட்டது என்று லலித் அத்துலத் முதலி கூறியுள்ளார். நவீன மக்கள் தொடர்பு சாதனங்கள் குறிப்பாக அரசின் பூரண கட்டுப்பாட்டிலேயே செயற்படுகின்றன. ஆனால் தொண்ணூறு சதவிகிதத்துக்கும் அதிகமான படிப்பறிவு கொண்ட மக்கள் வாழும் ஒரு நாட்டில் அதிலும் சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் விவேகிகளாகவும் இருக்கும் ஒரு நாட்டில் பொய்களைப் பிரசாரப்படுத்துவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்பு சாதனங்களின் சுதந்திரம் பற்றி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடந்த கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் அரசு உண்மையிலேயே நம்பகத் தன்மையை பெறவேண்டுமாயின் பக்கச் சார்பான செய்திகளைப் பரப்புவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாது விட்டால் விவேகிகளாக இருப்போரும், நாட்டின் நடப்புநிலைமைகளை அறிந்து கொள்ள விரும்புவோரும் வெரித்தாஸ், பி.பி.சி. போன்ற தகவல்தொடர்பு சாதனங்களை நோக்கித் தள்ளப்படுவதை தவிர்க்க முடியாது போய்விடும்.

செய்தித்துறையில் அரசுஆதிக்கம் செலுத்தும் போக்கினால் மக்கள் அதை உண்மைத் தன்மையில் சந்தேகம் கொள்ளுகின்றனர்.

இந்திய வரவு செலவுத் திட்டத்தில்

# பாதுகாப்புத் துறைக்கென 17,500 கோடி ரூபாய்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான இந்திய வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத்துறைக்கு சுமார் 17,500 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன் சுமார் 7032 கோடி ரூபா துண்டு விழும் தொகையாக இதே வரவு செலவுத் திட்டத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

இவ்வாறு பாதுகாப்புத் துறைக்கு அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதனால் முன்னாள் படையினருக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று முன்தினம் இந்திய பாராளுமன்றத்தில் நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்தார்.

உணவு மானிய ஒதுக்கீடு, இரசாயன உரங்களுக்கான மானியம், தனிநபர் வருமான வரிக்கான எல்லை ஆகியவை உயர்த்தப்பட்டிருக்கின்றது மேலும் விவசாய தேசிய அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கும் இவ்வரவு செலவுத் திட்டத்தில் வழிவகுக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

28 ஆண்டுகளில்

# இலங்கைக் குழந்தைகள் 10,000 பேர் விற்பனை

(கொழும்பு)

1964 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கைக் குழந்தைகள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றனர் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பி.சி.வி.குணரத்தின தெரிவித்துள்ளார்.

குழந்தைகளின்ஏற்றுமதியை தடை செய்ய போதியவலுவுள்ள சட்டவிதிகள் இல்லை என்பதாலேயே இந்த ஏற்றுமதிகள் இடம் பெற்றன என்றும்.

இந்தப் பலவீனத்தை பயன்படுத்தி குழந்தைப் பண்ணைகள் இலங்கையில் இயங்குகின்றன என்றும்.

இந்த வியாபாரத்தில் முக்கிய பிரமுகர்களும் சம்பந்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குழந்தை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் வருடாந்தம் ஒன்பது கோடி ரூபாவை வருமானமாகப் பெறுகிறார்கள் ஆனால் அவர்கள் குழந்தைகளை பெற்றுக்கொடுக்கும் தாய்க்கு நூறு ரூபாவை மட்டுமே கொடுக்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கடவுச்சீட்டு புதுப்பித்தல் பலகோடி ரூபா வருமானம்

(கொழும்பு)

கடவுச் சீட்டுப் புதுப்பித்தல், விசா வழங்குதல், அடையாளத்தை உறுதிப்படுத்தல் போன்றவற்றின் மூலம் கடந்த வருடம் மட்டும் வெளிநாடுகளிலுள்ள முப்பத்தெட்டு இலங்கைப் பணியகங்கள் 6,310,657,800 ரூபாவினைப் பெற்றுக் கொண்டதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

சவூதிஅரேபியா றியாட்டிலுள்ள இலங்கைப்பணியகமே அதிக வருமானத்தைப்பெற்றுத் தந்துள்ளது என்றும் கடந்த வருடம் எண்பத்தைந்தரை இலட்சம் ரூபா இந்தப் பணியகத்திற்கு வருமானமாகக்கிடைத்துள்ளது என்றும் லண்டனிலுள்ள இலங்கைப் பணியகம் அறுபத்திநான்கு இலட்சம் ரூபாவையும், பெற்றுக் கொடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## வதிவிட வேளாண்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் நடாத்தப்படும் வதிவிட வேளாண்மைப் போட்டியில் பன்னிரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இப்போட்டியின் முதலாம், இரண்டாம் கட்ட மதிப்பீடுகள் ஏற்கனவே முடிவடைந்துள்ளனஎனவும், இறுதி மதிப்பீடுகள் சென்ற இருபத்து மூன்றாம் திகதி நிறைவு பெற்றன எனவும், விரைவில் இப்போட்டி முடிவுகள் அறிவிக்கப்படுமெனவும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசிற்கு எதிராகப் போராட வங்கி ஊழியர் முஸ்தீபு

(யாழ்ப்பாணம்)

அரச வங்கிகளை தனியார் மயப்படுத்தும் அரசின் திட்டத்தை எதிர்த்து பெரியளவிலான போராட்டம் நடத்துவதற்கு வங்கி ஊழியர் சங்கம் தயாராகி வருகிறது.

பல்வேறு நெருக்கடிகளைத் தீர்க்கும் நோக்குடன் அரச வங்கிகளான மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றை தனியார் மயப்படுத்துவதற்கு அரசு முடிவெடுத்திருக்கிறது. அரசின் இம்முடிவை எதிர்த்து போராட்டம் நடாத்தப்படவிருக்கிறது அரச வங்கிகளில் கடமையாற்றும் பல்லாயிரக் கணக்கான ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும்வங்கி ஊழியர் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

மிக விரைவில் நாட்டில் உள்ள அனைத்து அரச வங்கி ஊழியர்களும் இணைந்து அரசுக்கெதிரான தொடர் போராட்டம் ஒன்றை நடாத்த இருக்கின்றனர். இதற்கு வசதியாக அனைத்துப் பகுதிகளிலும் உள்ள அரச வங்கிகளுடனும் மேற்படி சங்கம் எந்த நேரமும் தொடர்புகளை வைத்திருக்கிறது (ச)

## இரு மாதங்களில் 199 படை பலியாம்

(லண்டன்)

வடக்கு - கிழக்கில் இந்த வருடம் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இடம்பெற்ற சண்டைகளில் மொத்தம் 199 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் லங்காபுவத் வெளியிட்ட தரவை மேற்கோள் காட்டி பிபிஸி சிங்களச் சேவை இதனைத் தெரிவித்தது

## மீனவர் மீது துப்பாக்கிச் சூடு

(குருநகர்)

நாவாந்துறைக் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி மண்டைதீவு சிறிலங்கா இராணுவம் நேற்று நண்பகல் 11-10 மணியளவில் கலிபர் தாக்குதலை நடாத்தியது.

மீனவர்கள் கடலில் பாய்ந்து உயிர் பிழைத்துக்கரையை வந்து சேர்ந்தனரென்று அறிவிக்கப்படுகிறது.

சுமார் ஐந்து நிமிடங்கள் வரை நீடித்த கலிபர் வேட்டுகளை அடுத்து அப்பகுதியில் மயான அமைதி நிலவியது (88), (21)

பெருந்தோட்ட நிர்வாகம்

## தனியாரிடம் கையளிப்பு; சுதந்திரக்கட்சி கண்டனம்

(கொழும்பு)

பெருந்தோட்டங்களின்முகாமைத்துவத்தை அரசு தனியார் நிறுவனங்கள் வசம் கையளிப்பதை சிறிலங்கா சுதந்திரக் கட்சி கண்டித்துள்ளது.

இப்படி தனியார் வசம் கையளிப்பது தொடர்ந்து இடம் பெற்றால் எமது பொருளாதாரம் முற்று முழுதாகத் தனியார் வசமாகிவிடும். எமது பொருளாதாரத்தில் 80 சத விகிதம் வெளிநாட்டவர்கள் வசமாகி விடும் என்றும் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

449 பெருந் தோட்டங்களில் 70 சத விகிதமான தோட்டங்களின் நிர்வாகம் தனியாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது எஞ்சியுள்ள சுமார் 30 சத விகித தோட்டங்களில் 14 தோட்டங்கள் தென் இந்திய முதலாளியான முருகுப்பிள்ளையிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரச தோட்டங்களை நிர்வகிப்பதில் தவறுகள் இருந்தால் வேறு முகாமைத்துவத்தை ஏற்படுத்தலாம். அதற்காகத்தோட்ட நிர்வாகத்தை தனியார் வசம் கையளிக்கக் கூடாது என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இராம சேவையாளர் பதவி:

## பரீட்சை விண்ணப்ப திகதி நீடிக்க நடவடிக்கை

கிராம சேவையாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதியை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றது.

தற்பொழுது வெளிவந்திருக்கும் அறிவித்தலின்படி இறுதித் திகதி இம்மாதம் பத்தாம் திகதியாக உள்ளது.

யாழ். மாவட்டத்திற்கு மேற்படி அறிவித்தலும் விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தலும் வந்து சேராமையால் இங்குள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியாதநிலை தோன்றியுள்ளது. இதனால் விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதியை நீடிப்பதற்கு யாழ். அரச அதிபர் நடவடிக்கைகளை எடுத்துவருகிறார். (க)

காங்கேசன்துறை

## துறைமுகத்திற்கு விரைவில் தொழிலாளர்கள் செல்வர்

காங்கேசன்துறை துறைமுகத்தில் வேலை செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட துறைமுகத் தொழிலாளர்கள் விரைவில் காங்கேசன் துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட இருக்கின்றனர்.

எதிர்வரும் வியாழக்கிழமை திறப்பதற்காக உத்தேசிக்கப்பட்டிருக்கும் இத்துறைமுகத்தில் வேலை செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட தொழிலாளர்களது புகைப்படங்கள் அத்தாட்சிப் படுத்தப்பட்டு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன

முதற் கட்டமாக ஆறு லொறிகளின் மூலம் இத்துறைமுகத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை இத் துறைமுகம் திறக்கப்பட்டாலும் தற்பொழுது பாவனையில் இருக்கும் பருத்தித்துறை துறைமுகமும்தொடர்ந்து பயன்படுத்தப்பட இருக்கிறது. (க)

## முல்லை மீனவர்களுக்கு கடற்படை பெருந்தொல்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் மீன்பிடிக்கும் மீனவர்கள் கடற்படையினரால் பெரும் துன்பங்களுக்கு உள்ளாவதுடன் தமது பெறுமதியுடைய பல உபகரணங்களையும் இழந்துவருகின்றனர்.

சிறிலங்கா கடற்படையினர் படகுகளின் வெளியிணைப்பு இயந்திரம், வலைகள் என்பனவற்றை மீனவரிடம் இருந்து பறித்துச் செல்வதுடன் மீனவர்களை கடலில்வீசியும் வருகின்றனர்.

இதனால் மீனவர்கள் படகுகளையும் ஏனைய உபகரணங்களையும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவருகிறது.

## தேர்தல் ஆணையாளரிடம் அங்கீகரிக்க கோரவில்லை

ஜனதா விமுக்திப் பெரமுனையை (ஜே. வி. பி.) அங்கீகரிக்கும்படி தேர்தல் ஆணையாளரிடம் நாம் கேட்கவில்லை. இந்த நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாத்து ஒரு அரசியல் கட்சி ஜனநாயக வழியில் செல்வதற்கு உள்ள தடைகளை நீக்கித் தருமாறுதான் கோருகிறோம் இவ்வாறு ஜே. வி. பியின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்கா பி.பி ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

1960 களிலிருந்து ஜே. வி. பி செயற்பட்டும் 1982 இல்தான் அரசு ஜே. வி. பி யை அங்கீகரித்தது.

அரசியல் கட்சியாக நாம் செயற்பட்ட காலத்திலேயே அரசு எமது நண்பர்களையும், சகபாடிகளையும் சுட்டுக்கொன்றது.

இவ்வாறு சோமவன்ச அமரசிங்கா மேலும் தெரிவித்துள்ளார்.

### ஆனையிறவில்

- ★ நடுத்தர ரவைகள் -1778
- ★ தண்ணீர் கான் -03
- ★ மொபைல் செட் -01
- ★ இதற்குரிய பற்றரி -01
- ★ சப்பாத்து -02 சோடி
- ★ ஜே. ஆர். கைக்குண்டு -04
- ★ கிளைமர் -02
- ★ கிளைமர் அகற்றி -02
- ★ வயர் -02 றோல்
- ★ மழைக்கவசம் -01
- ★ ஏ.கே.எல்.எம் ஜி.லிங்-319
- ★ தலைக் கவசம் -02
- ★ கிட்பாக் -02
- ★ ஏ. கே. கோல்சர் -02
- ★ தண்ணீர்கான் கோல்சர்-03

இதேவேளை இந்த தாக்குதல் சம்பவத்தை ஊர்ஜிதம் செய்த சிறிலங்கா இராணுவ தரப்பினர் இரண்டு இராணுவத்தினர் பலியாகியதை ஒப்புக்கொண்டனர்.

### கொழும்பில்

அத்துலத்முதலியிடமும் கேட்கப்பட்டது. அத்துலத் முதலி ஒன்றும் ஒன்றும் பதினொன்று (11)என்றார் இருவரும்பிரதம மந்திரி பதவிக்குத் தெரிவு செய்யப்படவில்லை.

டி. பி. விஜேயதுங்கா கூப்பிடப்பட்டார். அதே கேள்வி- ''ஒன்றும்ஒன்றும் எத்தனை?'' ''நீங்கள் எதைச் சொன்னாலும் அதுதான் சரியான கூட்டுத்தொகை'' என்றார் விஜேயதுங்கா.

இதனால் இன்று டி. பி விஜேயதுங்கா பிரதம மந்திரியாகவும் நிதிமந்திரியாகவும், பிரதிபாதுகாப்பு அமைச்சராகவும் மூன்று பதவிகளை வகிக்கிறார்.

### அமைச்சர்

லைப் புலிகளோடு தொடர்பு உடையவர்கள் என்றும், அமைச்சர் ரஞ்சன் கொல்லப்பட்ட குண்டு வெடிப்பு மற்றும் கூட்டுப்படைத் தலைமையகக் குண்டுவெடிப்பு என்பவற்றுக்கும் விடுதலைப் புலிகளே பொறுப்பு என்றும், பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

### ஐ. தே. கட்சி

களிடம் கையளிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தீர்மானங்கள் குறித்து எப்பொழுது விவாதிக்கப்படும் என்பது பற்றி சபாநாயகரால் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

### கிராமங்கள்

அந்தப் பகுதியில் ஏற்கனவே புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளில் சிக்கிய பல இராணுவத்தினர் கால்களை இழந்துள்ளனர்.

இதேவேளை இராணுவத்தினர் முன்னேற முயலும் பகுதிகளில் சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான இரண்டு குண்டு வீச்சு விமானங்களும் இரண்டு உலங்கு வானூர்திகளும் கடுமையான குண்டு வீச்சுத் தாக்குதல்களைத் தொடர்ந்தும் நடத்தி வருகின்றன,

சாஸ்திரி கூளாங்குளம், புதுக்குளம், கட்டையர்குளம், தேவர்குளம், தரணிக்குளம், ஈச்சங்குளம், கருவேப்பங்குளம் ஆகிய கிராமங்கள்மீது கடந்த 27 ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக இத் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன, இதனால் இக் கிராமங்களை விட்டு மக்கள் முற்றாக வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர் சுமார் 600 குடும்பங்களைச் சேர்ந்த 3000 பேர்கள் இவ்வாறு வெளியேறியுள்ளனர்.

### பிரேமா

லண்டன் போகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

பேச்சுவார்த்தையில் ஈடுபடுபவருக்கு சகல வசதிகளும் செய்து தருவதாக அரசு கொடுத்த வாக்குறுதியை அடுத்தே டாக்டர் சந்திரா லண்டன்பயணம்மேற்கொள்ள விருப்பதாக தெரியவருகிறது

சுயவிருப்பத்தின் பேரிலேயே தான் லண்டன் செல்லவுள்ளதாக டாக்டர் சந்திரா பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை தலைமையகம்.

சுயதொழில்

விதவைகள் அனாதைகளுக்கான பயிற்சித் திட்டம்

அண்மைக்கால அசம்பாவிதங்களினால் விதவையாக்கப்பட்டோர், அனாதையாக்கப்பட்டோர் ஆகியோருக்கான வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம் ஒன்று மகளிர் தினமான 08.03.92 முதல் எம்மால் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதன் பொருட்டு இவர்களின் விண்ணப்பங்கள் 07.03.1992 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
01.03.92.
(சி/3989)


## மரண அறிவித்தல்

### திருமதி அருளம்மா இராசதுரை

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ் சென்ற சி. இராசதுரையின் (செல்வநாதன்-ஆனைக்கோட்டை) அன்பு மனைவி அருளம்மா (ராசாத்தி) அவர்கள் 1-3-92 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர்காலஞ்சென்றE S.S. செல்லத்துரை(கண்ணாடி). அன்னம்மா தம்பதியினரின் அருமைப்புதல்வியும், காலஞ்சென்ற திருமதி தம்பு கனகேஸ்வரியின் சகோதரியும், இரத்தினகுமார், இராஜினி, ராகினி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி), அசோகன் (கனடா) ஆகியோரின் தாயாரும், கோபாலன் (கனடா), செல்வநாதன் (ஓமான்), சிவம் (கனடா) ஆகியோரின் மாமியாரும், சிந்துஜா, நிரோஜன், மிரிசுதன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக 2-3-92 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கலைவாணி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்,
பிள்ளைகள்.

(2253)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.